# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்

## ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

## MCOP No.697/2025

| | |
|---|---|
| **சாட்சியின் வரிசை எண்** | மசா1 |
| **பெயர்** | ரேவதி |
| **க/த.பெயர்** | காந்தி |
| **வயது** | 30 |
| **விலாசம்** | ஆரணி,  திருவண்ணமாலை |
| **தொழில்** | ... |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 12.06.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பிரமாண வாக்குமூலத்தில் நான் ஆவண எழுத்தர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆவண எழுத்தர் என்பதற்கான உரிமம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை என்னிடம் உள்ளது. நான் ஆவண எழுத்தர் இல்லை என்றாலும் நான் மாத வருமானம் 35,000/ என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் என் குழந்தைகளை அழைத்து சென்ற போது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. பள்ளி எதிரில் நான் என் வாகனத்தை நிறுத்திய பிறகு எதிரில் வந்த வாகனம் இடித்தது. நான் என் வாகனத்தில் நானும் என் 2 குழந்தைகளும் சென்றோம். இருசக்கர வாகனத்தில் 2 பேர் மட்டும் தான் செல்லவேண்டும் என்பது சட்டம் என்றால் இரண்டும் சிறு குழந்தைகள் இருவரும் ஒரே பள்ளியில் தான் படிக்கிறார்கள். ஒரு குழந்தை முன் புறமும் ஒரு குழந்தை பின்புறமும் வைத்து அழைத்து சென்றேன். நான்

அவ்வாறு இரண்டு குழந்தைகளை வைத்து ஓட்டியதனால் தடுமாற்றத்தில் விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் அப்போது வாகனத்தை ஓட்டவில்லை வாகனத்தை நிறுத்திய பிறகு தான் விபத்து நடந்தது. நான் எந்த வாகனத்தின் மீது மோதினேன் என்றால் நான் எந்த வாகனத்தின் மீதும் மோதவில்லை வெள்ளை நிற கார் தான் என் மீது மோதியது. வாகனத்தின் பெயர் தெரியாது.

2. விபத்து நடந்த சாலை 10 அடி தான் என்றாலும் அதில் வாகனம் அதிவேகமாக வந்து விபத்தை ஏற்படுத்தியது என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அந்த சாலையில் கார் வேகமாக வரவில்லை என்றாலும் இரண்டு குழந்தைகளையும் வைத்து நான் ஓட்ட முடியாமல் தடுமாறி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் இல்லை. விபத்து நடந்த போது பின்புறம் இந்த குழந்தையை இறக்கிவிட்டுவிட்டேன் நானும் என் சின்ன குழந்தையும் தான் என் இருசக்கர வாகனத்தில் இருந்தோம். விபத்து நடந்த இடத்தில் இருந்து என் அம்மா மற்றும் அக்கா மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் ஆம். முதல்தகவல் அறிக்கையில் இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றதாக உள்ளது என்றால் நான் ஆட்டோவில் தான் மருத்துவமனைக்கு சென்றேன். முதல் தகவல் அறிக்கையில் தவறாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் நான் அவ்வாறு யாரிடமும் சொல்லவில்லை. மருத்துவமனைக்க சென்றதாக தான் சொன்னேன். என் அம்மா மற்றும் அக்கா மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது தான் விபத்து நடந்தது என்றால் தவறு. என் பெயரில் மருத்துவ காப்பீடு உள்ளதா என்றால் ஆம். எனக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. விபத்து நடந்து எத்தனை நாட்கள் ஆகிறது என்றால் ஒன்றரை ஆண்டு ஆகிறது. உடனடியாக மருத்துமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேனா என்றால் ஆம்.

3. எனக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு குணமடைந்துவிட்டதா என்றால் தற்போதும் வலி உள்ளது. நீண்ட நேரம் நிர்க்க முடியாது. எலும்பு முறிவு 1 வருடத்தில் சரியாகிவிடும் என்றால் எனக்கு செயற்கை முட்டி வைத்துள்ளார்கள். இரண்டு எலும்பு முறிவில் 2 ராடுகள் வைத்துள்ளார்கள். எனவே இன்னும் சரியாகவில்லை. என் பிரமாண வாக்குமூலத்தில் எலும்பு முறிவை நிறந்தர ஊணம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் தற்போதும் என்னால் அந்த காலை சரியாக பயன்படுத்தமுடியவில்லை. எனக்கு ஏற்பட்டது நிறந்தர ஊணம் கிடையாது என்றாலும் அதிக பணம் பெறுவதற்காக மிகை படுத்தி கூறுகிறேன் என்றால் தவறு. தற்போதும் வலி இருக்கிறது மருத்துவமனைக்கு சென்று வருகிறேன். எனக்கு கொடுக்கபட்ட ஆவணம் எழுத்தர் மாவட்ட உரிமமா, மாநில உரிமமா என்றால் மாவட்ட உரிமம். என் பிரமாண வாக்குமூலத்தில் மருத்துவ பில்கள் ரூபாய். 2,11,646/ என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆம். நான் ஆவண எழுத்தர் கிடையாது என்றாலும் நிரந்தர ஊணம் என்று பொய்யாக சொல்லி அதிகபடியான பணம் பெறுவற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

4. நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்று குழந்தைகளை பள்ளியில் விட்டேன் என்றால் ஆம். ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யதுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு குறித்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை, வரைபடம், குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மீது உள்ள தவறுகளை மறைப்பதற்காக தான் மேற்சொன்ன ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் முதலில் 2 நாட்களும் பிறகு 6 நாட்களும்

மொத்தம் 8 நாட்கள் மட்டும் தான் உள்நோயாளியாக இருந்தேன் என்றால் சரிதான். 30.11.2024 க்கு பிறகு தொடர் சிகிச்சை எடுத்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் குணமாகிவிட்டது என்பதால் தான் தொடர் சிகிச்சை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மசாஆ5 ஆவணங்கள் அனைத்தும் நகல் என்றால் ஆம். மருத்துவ செலவுகள் அனைத்தும் மருத்துவ காப்பீடு மூலம் திரும்ப பெற்றுவிட்டேனா என்றால் அனைத்தும் பெறவில்லை. மருத்துவ பில்கள் அனைத்தும் பெற்றுவிட்டதால் 2ம் எதிர்மனுதாரர் மருத்துவ பில்கள் கொடுக்கவேண்டியது இல்லை என்றால் மீதம் தொகை வரவேண்டியது உள்ளது. மருத்துவ காப்பீடு மூலம் எவ்வளவு பெற்றுள்ளேன் என்பது மருத்துவமனையில் இருந்து மருத்துவரை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரியல்ல. தொழில், வருமானம, வருமான இழப்பு குறித்த ஆவணங்ளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

X

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது,

**<u>5 வது நீதிபதி</u>**

**<u>சென்னை</u>**